முருகப்பெருமான் துணை

**மகான் ஜனக்குமாரர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.02.2024**, புதன்கிழமை

1. நல்லவை எல்லாம் வந்தடைய
நல்லவர்கள் எல்லாம் ஒன்றிணைய
வல்லமைபட பிரணவக்குடில் படைத்து
வரம்தரும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது சால்திங்கள்
வரங்களாக நவதிகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 09 ம் நாள், 21.02.2024, புதன்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை ஜனக்குமாரர் யானும்
அருளுவேன் உலக நலம் பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வரம் தந்து அரங்கனுடன் இருக்க
4. இருக்கவே ஏழாம் படை எனும்
இணையிலா பிரணவக் குடில்
வருத்தம் போக்கி வருவோரை தேற்றி
வாழவைக்கும் ஞான சபையாகும்
5. ஆகவே கலியுகத்தார் நாடிவர
அவரவர் வேண்டலுக்கேற்ப
வகையான நல்ல மாற்றங்களும்
வளர்ச்சியானச் சூழலும் பெருகி
6. பெருகியே பிறவி நோக்கத்தை
பிழையற அறியும் உணரும் தெளிவும்
வருங்கால வாழ்வை தருமவழியில்
வழிமொழிந்து ஏற்கும் ஞானமும்
7. ஞானமும் நன்னடத்தை கூடிட
ஞானபண்டிதனை வணங்கிடும்
நம்பிக்கையும் ஈடுபாடும் கூடிட
ஞானவான்களாக மாற்றம் பெறுவர்

8. மாற்றம் தரும் மாதவசியாக
மண்ணுலகில் அரங்கமகானும்
ஆற்றல்மிக்க தருமம் துவக்கி
அன்னதான சேவை வளர்த்துவர

9. வருகவே உலக மக்களெல்லாம்
வணங்கி அரங்கன் வழியில்
தருமத்தை கடைப்பிடித்துவர
தக்கபடி வரும் மக்கட்கெல்லாம்

10. எல்லோருக்கும் தருமபலமும் பெருகி
எல்லாம் சமம் என்கின்ற வண்ணம்
வல்லமைபட சமத்துவமும் பெருகி
வரலாறை மாற்றுகின்ற ஞானிகளாக

11. ஆகவே உலகோரெல்லாம் சிறந்து
அரங்கமகான் அவதார நோக்கமாக
யுகமாற்றமும் செய்திட நேரும்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–